Registered as a Newspaper

... Branch Library


# உதயன்

விலை ரூபா 6·00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஐப்பசி 24 சனிக்கிழமை (09-11-1996) UTHAYAN Lively National Tamil Daily கதிர் 266


# ரணில் ஐந்து மணி நேரம் பொலீஸ் விசாரணையில்!

## பட்டலந்த வதைமுகாம் படுகொலைகள் குறித்து

கொழும்பு, நவம்பர் 9

பட்டலந்த வதைமுகாம் படுகொலைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஐந்து மணி நேரம் பொலீஸாரால் நேற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

இரண்டு சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் எதிர்க்கட்சித் தலைவரின் கொழும்பு அலுவலகத்துக்குச் சென்று அங்கு அவரை விசாரணை செய்தனர்.

ரணில் விக்கிரமசிங்காவின் சொந்தத் தொகுதியான பியகமவில் உள்ள பட்டலந்தப் பகுதியில் — ரணில் பிரதமராக இருந்த காலத்தில் — சித்திரவதை முகாம் ஒன்று இயங்கியதாகவும் —

சில பொலீஸ் அதிகாரிகளினால் சட்ட விரோதமான

(6 ஆம் பக்கம் பார்க்க)



## இராணுவ பேச்சாளர் திஸ்ஸ ஜெயதுங்க

ஸ்ரீலங்கா இராணுவத்தின் உத்தியோகபூர்வ பேச்சாளராக பிரிகேடியர் திஸ்ஸ ஜெயதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை இராணுவப் பேச்சாளராகக் கடமையாற்றி வந்த பிரிகேடியர் சரத் முனசிங்க மட்டக்களப்புத் தளபதியாகப் பொறுப்பேற்றிருப்பது தெரிந்ததே. (உ- 150)

## மட்டக்களப்பு-ஹபரண பகுதியில் மின்சாரக் கம்பங்கள் குண்டு வைத்துத் தகர்ப்பு

கொழும்பு, நவ. 9

விடுதலைப் புலிகள் மட்டக்களப்பு - ஹபரணவில் அதிசக்தி வாய்ந்த மின்சார விநியோக லைன்களையும், உபகரணங்களையும் குண்டு வைத்துத் தகர்த்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நாசவேலை காரணமாக மட்டக்களப்பு, காத்தான்குடி, ஏறாவூர் ஆகிய பிரதேசங்களுக்கான மின்சார விநியோகம் பாதிக்கப்பட்டுள்

(6 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா சிவில் நிர்வாகம்: குழப்ப புலிகள் திட்டம்

### பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, நவ. 9

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள வவுனியா நகரில் சிவில்நிர்வாக நடவடிக்கைகளைக் குழப்பப் புலிகள் திட்டமிட்டிருப்பது பற்றிய தகவல்கள் பாதுகாப்பு வட்டாரங்களுக்குக் கிடைத்துள்ளன என கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

வவுனியா பிரதேசத்துக்குள் வெடிப்பொருள்களைப் புலிகள் கடத்தி வந்திருப்பதாக புலனாய்வு அறிக்கைகள் கூறுகின்றன.

புலிகள் கணிசமான அளவில் இப்பிரதேசத்துக்குள் ஊடுருவியிருப்பது குறித்தும்—

பிரதேசத்தில் அமைதி நிலையைக் குழப்ப அவர்கள் திட்டமிட்டிருப்பது குறித்தும்—

தற்போது தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

—இவ்வாறு அந்தச் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஆஸ்திரேலியா உதவி வழங்கும்

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 9

இலங்கையில் இன்னல்படும் தமிழ் மக்களுக்குச் சுமுகமான தீர்வு காண இலங்கை அரசுக்கு அனைத்து உதவிகளையும் ஆஸ்திரேலியா வழங்கும்.

இப்படி ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்சான்டர் டவுண் தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் ஆஸ்திரேலிய குயீன்லாண்ட் மாநில நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் வோல்ட் பிரக்வோர்ட் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை விடயம் குறித்து ஆஸ்திரேலியாவின் வெளிநாட்டுக் கொள்கை என்ன? அங்கு அமைதித் தீர்வு காண ஆஸ்திரேலியா எந்த வகையில் உதவுகிறது? என்ற கேள்விகளை வோல்ட் பிரக்வோர்ட் எழுப்பி இருந்தார்.

இதற்குப் பதில் அளித்த வெளிவிவகார அமைச்சர் அலெக்சாண்டர் டவுன் மேலும் கூறியதாவது:-

இலங்கை இனப்பிரச்சினையால் மக்கள் துன்பப்படுகின்றனர்.

கடந்த காலத்தில் வடக்கு — கிழக்கு மற்றும் கொழும்பில் சுமார் 10 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு, அங்குள்ளவர்களா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புயல், வெள்ளத்துக்கு ஆந்திராவில் 1000 பேர் பலி

ஹைதராபாத், நவ. 9

இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் கடந்த புதன் கிழமை வீசிய புயற் காற்றின் போது கொல்லப்பட்டோர் எண்ணிக்கை ஆயிரமாக அதிகரித்துள்ளது.

வெள்ளத்தில் மூழ்கி உள்ள தாழ்வான பகுதிகளில் இருந்து சடலங்களைத்தேடி எடுக்கும் நடவடிக்கைகள் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வியாழக்கிழமை மட்டும் 350 சடலங்கள் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இறந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று ஆந்திர மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

அதேசமயம் புயற்காற்றுக் காரணமாக பாண்டிச் சேரியில் 8 பேர் இறந்ததாகவும் 70க்கும் மேற்பட்டோர் காணாமற் போய்விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-4-10)

## பட்டதாரி பயிலுநர்கள் 500 பேர் உண்ணாவிரதம்

கொழும்பு, நவ. 9

நிரந்தர நியமனம் கோரிப் பட்டதாரி பயிலுனர்கள் 500 பேர் சாகும் வரையான உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பு இசுறுபாயாவில் உள்ள கொள்கை, திட்டமிடல் அமைச்சு அலுவலகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் நடைபெறுகிறது.

அரசாங்க, தனியார் நிறுவனங்களில் 94 ஆம் ஆண்டு நியமனம் பெற்ற தமக்கு நிரந்தர நியமனம் இன்னும் வழங்கவில்லை என்றும் — சம்பளமாக ரூபா 2500 மட்டுமே வழங்கப்படுகிறது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## செய்திச் சாரம்

### யாழ் நகரதளபதி பிரிகேடியர் மல்லவராய்ச்சி

திருகோணமலை, நவ. 9

யாழ்ப்பாண நகர இராணுவத் தளபதியாக பிரிகேடியர் நந்தா மல்லவராய்ச்சி கடந்த ஐந்தாம் திகதி முதல் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

கடந்த ஜூலை மாதம் 4ஆம் திகதி யாழ். ஸ்ரான்லி வீதியில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்த பிரிகேடியர் ஆனந்த ஹமங்கொடவின் இடத்துக்கு இவர் நியமிக்கப் பட்டிருப்பதாகக் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

பிரிகேடியர் மல்லவராய்ச்சி இதுவரை வன்னித்தளபதியாக இருந்தார். தற்போது புதிய வன்னித் தளபதியாகப் பிரிகேடியர் எகொடவில நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

(உ-150)

### அன்ரநோவ் விமானங்கள் கொள்வனவு

திருகோணமலை, நவ. 9

உக்கிரைனில் இருந்து நான்கு ''அன்ரநோவ்'' ஏ. என். 32 ரக இராணுவப் போக்குவரத்து விமானங்கள் விமானப்படைக்குக் கிடைக்கவிருக்கின்றன.

இந்த விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்று உக்கிரைன் — இலங்கை நாடுகளுக்கிடையில் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகக் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-3-150)

### ராவுக்குப் பிணை

டில்லி, நவ. 9

முன்னாள் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் மோசடி ஊழல் சம்பந்தமாக 2 வழக்குகளில் கைது செய்யப் படுவதிலிருந்து நேற்றுத் தப்பிக்கொண்டார்

டில்லி உயர் நீதிமன்றம் இந்த இரு வழக்குகளிலும் அவருக்கு நேற்றுப் பிணை வழங்கியது. (இ-4)

### தாண்டிக்குளம்; 2 தமிழர் கைது

கொழும்பு, நவ. 9

வவுனியா தாண்டிக்குளம் தடை முகாமில் இருந்து வட பகுதிக்கு தடைசெய்யப்பட்ட பொருள்களைக் கொண்டு செல்ல முயன்றதாகக் கூறப்படும் இருவர் நேற்று பிற்பகல் கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த வசந்தகுமார், புதுக்குடியிருப்பைச் சேர்ந்த கதிர்வேல் தர்மராஜா ஆகியோரே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

ஓட்டு வேலைக்கான 400 பாளங்கள், 82 பிஸ்ரன் றிங்ஸ், 28 பியரிங், 12 பொதியில் அடைக்கும் செற்றுகள் மோட்டார் சைக்கிள்களுக்குரிய 35 றேஸர்கள் ஆகியவற்றை இவர்கள் கடத்திச் செல்ல முயன்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ- 4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் நாகநாதர் தியாகராசா

(இளைப்பாறிய ஊழியர், உணவுக்கட்டுப் பாட்டுத் திணைக்களம், யாழ்ப்பாணம்.)

மலர்வு: 21 – 04 – 1906

உதிர்வு: 02 – 11 – 1994

திதி: 9 – 11 – 96

பண்பின் இலக்கணமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் அறிவுச் சுடரொலியாய்
இன்மொழி பேசி இதமாக எமையணைத்து
இன்றுடன் உனைப்பிரிந்து ஈராண்டு சென்றாலும்
தீபத்திருநாளாம் தீபாவளித் தினத்தினிலே
தீபமாகச் சென்று விட்டீர் – இன்று
எட்டாத சித்திரனாய் – கிட்டாமல் இருக்கின்றார்
நின் நினைவடி நின்று ஆத்மா சாந்தி அடைய
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல. 30, நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (43567)

## மரண அறிவித்தல்கள்

### நடராஜா மகேந்திரன்

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காடு செல்லர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா மகேந்திரன் 22 - 10 - 96 இல் மல்லாவியில் அகாலமரணமானார்.

இவர் காலஞ்சென்ற நடராஜா மற்றும் பரிமளம் ஆகியோரின் அன்பு மகனும், கலாநிதியின் அன்புக் கணவரும், சஞ்சய்காந்தன், அஜந்தன் ஆகியோரின் அன்புத் தகப்பனும், கதிர்காமநாதன், சரஸ்வதி ஆகியோரின் அன்பு மருமகனும், கமலராணி, புவனேந்திரன், விமலராணி, ரவீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சத்தியநாதன் (ரவி, பிரான்ஸ்), ஆனந்தகுமார் (ஜேர்மனி), சண்முகராஜா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23 - 10 - 96 இல் மல்லாவியில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ஷண் றெக்கோடிங் ஸ்பொட்

நவீன சந்தை,
யாழ்ப்பாணம். (43560)

திருமதி

### சிவசிதம்பரம் இரத்தினம்மா

(பரமேஸ்வரி)

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த சிவசிதம்பரம் இரத்தினம்மா (பரமேஸ்வரி) அவர்கள் 07 - 11 - 96 வியாழன் காலமாகி விட்டார்.

இவர் நகுலேஸ்வரி (பபி) (சுவிஷ்), மகாலக்ஷ்மி, நகுலச்சந்திரன், சந்திரசேகர், யோகராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், மண்டைதீவைச் சேர்ந்த நடேசலிங்கம் (சுவிஷ்), அவர்களின் அன்பு மாமியாரும், நிஜுஜாவின் அன்புப் பேர்த்தியுமாவார்.

இவரின் பூதவுடல் கோண்டாவில் மயானத்தில் வியாழக்கிழமை தகனம் செய்யப்பட்டது.

தகவல்:
யோகராணி
(மகள்)

பலாலி வீதி,
கோண்டாவில். (43568)

## பற்றை மறைவில் சடலம்

தென்மராட்சி, நவ.9

நாற்பது வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் கொடிகாமம் நாவலடியில் பாதுகாப்பு மண் அரணுக்கு அருகில் உள்ள பற்றை மறைவில் கண்டுபிடிக்கப்பட்டது.

வெள்ளைச் சாரம் அணிந்து காணப்பட்ட இச் சடலத்துக்கு அருகில் அழுக்கான வேட்டியும் பச்சைக் கோடிட்ட சாரமும் துவாயும் சொப்பிங் பை ஒன்றில் காணப்பட்டன.

மர்மமான முறையில் இறந்து காணப்படும் இவரைப்பற்றிய தகவல் தெரிந்தவர்கள் அல்லது சடலத்தை அடையாளம் காட்டுபவர்கள் கொடிகாமம் கிராம அலுவலர் க. தங்கமயிலோனுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது

(இ-117)

## குடாநாட்டில் சிவில் நிர்வாக குழுக்கள்

மக்களின் குறைகளை ஆராய்ந்து அவற்றுக்குத் தீர்வு காண்பதற்காக இராணுவத்தினரின் அனுசரணையுடன் சிவில் நிர்வாகக்குழுக்கள் யாழ். குடாநாட்டில் உருவாக்கப்பட்டு வருகின்றன என்று கொழும்புப்பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இந்தக் குழுக்கள் வட்டார ரீதியாக தெரிவு செய்யப்படுகிறது என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர் சகாய நிதிச் சங்க கூட்டம்

வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கத்தின் 62 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டமும் வைர விழா மலர் வெளியீடும் இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் தலைவர் அ. ஜெயராஜன் தலைமையில் நடைபெறும்.

இச் சங்கத்தின் உப தலைவர் சே.சிவராஜா, செயலாளர் வி.ஸ்ரீசக்திவேல் ஆகியோர் இவ் வைபவத்தின் போது கௌரவிக்கப்பட உள்ளனர்.

(இ-4-51)

## மலாயன் ஒய்வூதியம்

யாழ். மாவட்டத்தில் மலேசியா சிங்கப்பூர் ஒய்வூதியம் பெறுபவர்களின் ஒக்ரோபர் மாதத்திற்குரிய ஒய்வூதிய வவுச்சர்கள் யாழ் செயலக ஒய்வூதியப் பிரிவினரால் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ-100)

அரசாங்க கேள்வி

## அறிவித்தல்

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல் - 1997

### சுகாதார சேவைகள் பிரிவு

யாழ்ப்பாணம்.

1997ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம், சுகாதாரசேவைகள் பிரிவில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு, பால் தவிர்ந்த உணவு வழங்குவதற்கான கேள்விகள் 1996 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்களைப் பெற விரும்புவோர் தமது பெறுமதி விவரங்களைச் சமர்ப்பித்து கேள்விப் பத்திரப் பணமாக 50/- ரூபாவும் மீளளிப்புடனான கேள்விப் கட்டுப்பணமாக 250/- ரூபாவும் செலுத்தி 11-11-96 முதல் இப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். முழு விவரங்களையும் அலுவலக நாள்களில் பார்வையிடலாம்.

வைத்திய கலாநிதி வை. ஸ்ரீ காந்தா,
மாகாண பிரதிப் பணிப்பாளர்
சுகாதார சேவைகள்
46, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (சி/3482)

அரசாங்க கேள்வி

## அறிவித்தல்

### சலவைச் சேவை - 1997

### சுகாதார சேவைகள் பிரிவு

யாழ்ப்பாணம்.

1997 ஆம் ஆண்டில், யாழ்ப்பாணம், சுகாதார சேவைகள் பிரிவில் உள்ள அரசாங்க வைத்திய நிறுவனங்களுக்கு சலவைச் சேவையை வழங்குவதற்கான கேள்விகள் 1996 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி முற்பகல் 10.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்களைப் பெற விரும்புவோர் தமது பெறுமதி விவரங்களைச் சமர்ப்பித்து உரிய கேள்விப்பத்திரப் பணத்தைச் செலுத்தி 11-11-96 முதல் இப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். முழு விவரங்களையும் அலுவலக நாள்களில் பார்வையிடலாம்.

வைத்தியகலாநிதி. வை. ஸ்ரீகாந்தா,
மாகாண பிரதிப் பணிப்பாளர்
சுகாதார சேவைகள்,
46, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (சி/3481)

## பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை, பளை.

### 1997 ஆம் ஆண்டுக்கான

# கேள்வி அறிவித்தல்

1. பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசத்தில் உள்ள பின்வரும் இறைச்சிக்கடைகளை 1997 - 01 - 01 முதல் 1997 - 12 - 31 வரை குத்தகைக்கு ஏற்று நடத்துவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 22 - 11 - 96 ஆம் திகதி மாலை 2-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்களை உரியபடி, படிவக்கட்டணம், கேள்விவைப்புப்பணம் என்பவற்றைச் செலுத்தி 20-11-96 ஆம் திகதிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 25-11-96 ஆம் திகதி காலை 10. 00 மணிக்குத் திறக்கப்படும்.
2. சித்திகரக் கேள்விக்காரர்கள் கேள்வித்தொகையின் 1/3 பங்கை உடன்செலுத்தி மாதாந்தம் 10 சம தவணைப்பணங்களாக மீதித் தொகையைச் செலுத்தல் வேண்டும். இது சம்பந்தமான மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.
3 போதிய காரணங்களுக்காக கேள்விகளை நிராகரிக்கவோ, இரத்துச் செய்யவோ விசேட ஆணையாளருக்குப் பூரண அதிகாரம் உண்டு.

| இல. | குத்தகையின் தன்மை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்விப் பிணைப் பணம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1. | பளைச் சந்தை மாட்டிறச்சிக்கடை | 200/- | 500/- | 60,500/- |
| 2. | பளைச் சந்தை ஆட்டிறைச்சிககடை | 200/- | 500/- | 4,000/- |
| 3. | முகமாலைச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 200/- | 500/- | 10,000/- |

பா. செந்தில்நந்தன்,
விசேட ஆணையாளர்,
பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை,
பளை.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை,
பிரதேச சபை பணிமனை,
பளை.
06-11-1996. (சி/3483)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nallur Branch Library

# பல்கலைக்கழக மாணவர் பெங்களூரில் ஆர்ப்பாட்டம்

## அழகு ராணிப் போட்டி நடத்த எதிர்ப்பு

பெங்களூர் நவ. 9

இந்தியாவில் பெங்களூரில் நடைபெறவுள்ள உலக அழகு ராணிப் போட்டியை எதிர்த்து அங்கு மாணவர்களால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது தீக்காயங்களுக்கு உள்ளான ஒரு மாணவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முதன்முறையாக இந்தியாவில் நடைபெறவுள்ள இந்த உலக அழகுராணிப் போட்டியை நடத்த வேண்டாம் எனக்கோரி சுமார் 500 பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் இந்தியப் பிரதமர் தேவகௌடாவின் கொடும்பாவிக்குத் தீ மூட்டினர்.

அப்போதே 18 வயதுடைய மாணவி ஒருத்தியின் தலையிலும் உடலிலும் தீப்பிடித்தாகவும் —

உடனிருந்த பல்கலைக்கழக மாணவிகள் தீயை உடனடியாக அணைக்கத் தவறிவிட்டனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ–10)

## பறவைகளுக்கு எதிராக மீனவர் போராட்டம்!

றோம், நவ. 9

இத்தாலியில் உள்ள சப்தீனியா என்ற இடத்தில் காப்றாஸ் என்னும் பெரிய ஏரி உள்ளது. அப்பகுதியில் வாழும் மீனவர்கள் அந்த ஏரியிலேயே மீன்பிடித்து சீவித்து வருகின்றனர்

ஆனால் இந்த ஏரிப்பகுதியை ''கொமறான்ஸ்'' என்ற பறவைகள் இரண்டு வாரங்களாக முற்றுகையிட்டு ஏரியில் உள்ள மீனைப் பிடித்துத் தின்று கொண்டிருக்கின்றன.

சுமார் 10 கோடி ரூபா மதிப்புள்ள மீன் இதுவரை பறவைகளுக்கு இரையாகி விட்டது. இதனால் மீனவர்களின் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டு விட்டது.

மீனை மட்டுமே உணவாகக் கொண்ட ''கொமறான்ஸ்'' பறவைகளை வேட்டையாடக் கூடாது என்ற இத்தாலி நாட்டின் சட்டத்தை எதிர்த்து மீனவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

பறவைகளை வேட்டையாட அரசு அனுமதிக்காவிடின் படகுகளில் சென்று அத்தனை பறவைகளையும் வலைவீசிப் பிடித்துக் கொன்று விடுவோம் என மீனவர்கள் எச்சரித்துள்ளனர். (இ-10)

## ரயில் நிலைய விஷவாயு வழக்கு

ரோக்கியோ நவ. 9

ரோக்கியோ ரயில் நிலைய விஷவாயு வழக்கு விசாரணையின் போது ஷோகோ ஷகாரவை நீதி மன்றத்திலிருந்து வெளியேறுமாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இந்த முட்டாள் தனமான விசாரணையை நிறுத்துங்கள் என மீண்டும் மீண்டும் அவர் கத்தி, குழப்பம் செய்த போதே வெளியேற்றப்பட்டார். (இ–10)

ஆப்கானிஸ்தான்:

## போட்டிக் குழுக்களை ஒற்றுமைப்படுத்த முயற்சி

நியூயோர்க், நவ 9

ஆப்கானிஸ்தானில் போரிடும் குழுக்கள் மத்தியில் இணக்கம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்து கலந்துரையாடுவதற்கு இம்மாதம் 18ஆம் திகதி கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளார் ஐ நா. பொதுச் செயலர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி.

இக்கூட்டத்தில் இந்தியா, சீனா, பாகிஸ்தான் உட்பட 15 நாடுகள் பங்குபற்றும். (இ–10)

## ரஷ்ய விண்வெளி வீரரின் பயணம் ஒத்திவைப்பு!

### நிதிப் பற்றாக்குறை காரணம்

விண்வெளியில் வலம் வந்து கொண்டிருக்கும் ரஷ்ய விண்வெளித் தளத்துக்கு 3 விண்வெளி வீரர்களை அனுப்பும் திட்டம் நிதிப் பற்றாக்குறை காரணமாக அடுத்த பெப்ரவரி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் 15 ஆம் திகதி இவர்களை அனுப்ப முதலில் திட்டமிடப்பட்டிருந்தது.

விண்வெளிச் சோதனைக்கென சோவியத் யூனியன் பெருமளவு தொகையை ஒதுக்கி வந்தது.

சோவியத்யூனியன்உடைந்த பின்னர் போதிய நிதி ஒதுக்கப்படாமல் விண்வெளிச் சோதனைகள் பல தடைகளுக்கு உள்ளாகி வருகின்றன.

## உலக அரங்கில்

## 141 பேருடன் விமானத்தைக் காணவில்லை

நைஜீரிய விமானம் ஒன்று நேற்று முன்தினம் 132 பயணிகளுடனும், 9 விமானச் சிப்பந்திகளுடனும் காணாமற் போய்விட்டது. விமானத்தைத் தேட தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. (இ–10)

## 7 பேர் பலி!

சுவிற்சர்லாந்தின் 'செஸ்னா 421'' ரக தனியார் விமானம் ஒன்று நேற்று முன்தினம் ஜெனிவாவுக்கும், போர்டோவுக்கும் இடையில் தரையில் மோதி வெடித்துச் சிதறியது. அதில் பயணம் செய்த 6சுவிஸ் பிரஜைகளும் விமானமோட்டியும் இறந்தனர். (இ–10)

# இரகசியத் தளம் இயங்குவதற்கு கம்போடியாவில் வாய்ப்பு அதிகம்!

## ஆனால் புலிகளுக்குத் தடையாக இருப்பது இந்திய கடற்படை ரோந்து

புலிகள் இயக்கத்தின் வெளிநாட்டு வியாபாரத் தொடர்புகளுக்கு பொறுப்பாக இருப்பவர் கே. பத்மநாதன்.

கே.பி என்று சுருக்கமாக அழைக்கப்படுவார்.

பத்மநாதனின் புகைப்படம் உட்பட சகல விவரங்களும் இலங்கை அரசின் உளவுத் துறையிடம் இருக்கின்றன.

சர்வதேசப் பொலீசாரான 'இண்டர்போல்' வசமும் பத்மநாதன் பற்றிய தகவல்கள் இருக்கின்றன.

ஆனாலும் பத்மநாதனை இதுவரை பிடிக்க முடியவில்லை. இண்டர்போல் கூட அவரை நெருங்க முடியவில்லை.

பத்மநாதன் எல்லோருக்கும் கடுக்காய் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்.

காரணம் என்ன? பத்மநாதனின் புகைப்படத்தை வைத்துக்கொண்டு அவரைத் தேடினால் ஏமாற்றம்தான் மிஞ்சும்.

இப்போது அவரது தோற்றம் மாறியிருக்கிறது. சமீபத்தில் மிக இரகசியமாக பத்மநாதன் பிளாஸ்ரிக் அறுவைச் சிகிச்சை மூலம் தனது முகத்தை மாற்றிக் கொண்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பத்மநாதன் இப்போது எப்படியான தோற்றத்தில் இருக்கிறார்; எங்கே இருக்கிறார் என்ற இரகசியங்கள் பிரபாகரனுக்குமட்டுமே தெரியும்.

### கம்போடியாவில்

சமீபத்தில் இலங்கை அரசுக்கு கிடைத்துள்ள தகவல்களின்படி பத்மநாதன் கம்போடியா நாட்டில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

கம்போடியாவில் இருந்துதான் புலிகளுக்குத் தேவையான ஆயுதங்களை பத்மநாதன் வாங்கிக் குவிக்கிறார்.

கம்போடியாவில் புலிகளின் தளம் ஒன்று இருக்கிறது. அதன் பொறுப்பாளரும் பத்மநாதன் தான் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தகவல்கள் கிடைத்ததும் இலங்கை அரசு உடனடியாக கம்போடிய பிரதமருடன் தொடர்பு கொண்டுள்ளது அவரும் உடனடியாக விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் ''தினமுரசு'' வார சஞ்சிகையில் ''கம்போடியாவில் கால் ஊன்றும் புலிகள்'' என்ற தலைப்பில் ''நாரதர்'' எழுதிய ''எக்ஸ்ரே ரிப்போர்ட்'' இங்கு மறு பிரசுரஞ் செய்யப்படுகிறது.

உண்மையில் இரகசிய தளம் ஒன்றை வைத்திருக்கவும், ஏனைய நாடுகளைப் போல் இல்லாமல் வெளிநாட்டவர்கள் சுதந்திரமாக நடமாடவும் கம்போடியாவில் வாய்ப்புகள் அதிகம்.

உலகின் எந்தவொரு நாட்டில் இருந்தும் விசா இல்லாமலேயே கம்போடியாவுக்கு செல்ல முடியும். கம்போடியாவில் இறங்கிய பின்னர் 'என்றி விசா' எடுத்தால் போதும்.

கம்போடியாவைச் சூழ உள்ள தாய்லாந்து, பர்மா போன்ற நாடுகளுக்கு இலகுவாகச் செல்லக்கூடியதாக இருப்பதும் மற்றொரு வசதி.

### இலங்கையருக்கு வாய்ப்பான சூழ்நிலை

கம்போடியாவில் உள்ள நிலைமை வேறு நாட்டவர்களைக் காட்டிலும் இலங்கை-இந்தியா நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு சாதகமானது.

கம்போடியா மக்கள் திராவிட இனச்சாயலை உடையவர்கள். 11 ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் இருந்து கம்போடியாவுக்கும் பல்லவர் ஆட்சி பரவியிருந்தது

பல்லவர் ஆட்சிக்காலத்தில் கம்போடியாவில் இந்துக் கோயில்களும் கட்டப்பட்டன. கம்போடியாவில் உள்ள இந்துக் கோயிலான 'அங்கோர் வாட்' என்னும் ஆலயம் மிகவும் பிரமாண்டமானது. 5 கோபுரங்களையும், 5 பிரகாரங்களையும் கொண்டது. பிரகாரச் சுவர்களில் மகாபாரத, இராமாயணக் காட்சிகளைக் கொண்ட சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலில் உள்ள ஆச்சரியம் ஒன்றையும் குறிப்பிட்டாக வேண்டும். இரண்டாவது பிரகாரத்தின் வடக்கு வாயிலில் மூலஸ்தானத்தைப் பார்த்தவாறு நின்று நமது மார்பில் ஒரு முறை தட்டியதும் 'ஓம்' என்ற எதிரொலி கிளம்புமாம்.

இதுதவிர அம்பாள் கோயில்கள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. பண்டைய தமிழ் இலக்கியங்களில் 'காம்போஜம்' என்ற பெயரில் அழைக்கப்பட்டதும் கம்போடியாதான்.

பௌத்த மதம் பரவியதைத் தொடர்ந்து கம்போடியாவில் சிவ வழிபாடு அழிந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

கம்போடியாவின் பிரதமராக இருப்பவர் நோர்தம் சிஹநோக். அதன் தமிழ் அர்த்தம் என்ன தெரியுமா? நாரதன் - தர்பராஜா.

கம்போடிய மக்களும் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது நம்மைப் போலவே கைகூப்பி வணக்கம் சொல்லுகின்றனர். கம்போடியாவில் கவரும் மற்றொரு அம்சம் அழகான பெண்கள் நீண்ட கூந்தலுடன் மிக அழகாகத் தோற்றமளிப்பார்கள். கம்போடியாவில் கவலைக்குரிய விடயம் போதைப் பொருள், போதைக் கடத்தலின் மையங்களில் ஒன்றாக இருக்கிறது கம்போடியா.

வட தாய்லாந்து, கம்போடியா மற்றும் பர்மா ஆகிய நாடுகளில் உள்ள அடர்ந்த காட்டுப் பிரதேசங்கள் 'தங்க முக்கோணம்' என்றழைக்கப்படுகின்றன. அங்குதான் போதைப் பொருள் உற்பத்தி வெகு தீவிரமாக நடக்கிறது.

போதைப் பொருள் கடத்தல் காரர்களையே கண்டு பிடித்து கைது செய்ய முடியாத கம்போடிய அரசு அங்கு புலிகளின் தளம் இருந்தால் அதனைக் கண்டுபிடிக்க முடியுமா என்பது சந்தேகம்தான்.

### கெமர் ரூச்

அதுதவிர கம்போடியாவில் ''கெமர் ரூச்'' என்னும் தீவிரவாத இயக்கமும் இருக்கிறது. அவ்வியக்கத்தின் ஒரு பகுதியினர் அரசாங்கத்துடன் இணைந்துள்ளனர். மறுபகுதினர் தலைமறைவாக செயற்படுகின்றனர். விமான எதிர்ப்பு ஆயுதங்களான 'சாம் 7' ரக ஆயுதங்கள் அவர்களிடம் தாராளமாக உள்ளன

அந்தப் பிரிவினருடனும் புலிகளுக்கு தொடர்பு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

அது தவிர கம்போடிய இராணுவத்தில் உள்ள அதிகாரிகள் சிலரும் இரகசியமாக ஆயுத வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். அவர்களுக்குத் தேவையானது பணம்.

கம்போடியாவை புலிகள் தளமாக வைத்திருக்க பூகோள நிலையும் ஒரு காரணம் என்று கருதப்படுகிறது.

கம்போடியாவில் இருந்து தாய்லாந்திற்கு வந்தால் அங்கு புக்கெற் என்றொரு தீவு இருக்கிறது. முல்லைத் தீவுக்கு கிழக்குப் பக்கமாக அத்தீவு அமைந்துள்ளது. அங்கிருந்துதான் கப்பல் மூலம் முல்லைத்தீவுக்கு ஆயுதங்கள் கொண்டுவரப்பட்டதாக நம்பப்படுகிறது.

தாய்லாந்திலும் புலிகளின் நடமாட்டம் காணப்பட்டதாக முன்னர் வெளியான செய்திகளும் அந்தச் சந்தேகத்துக்கு வலுவூட்டுகின்றன.

கம்போடிய அரசு ஒரு பேருக்கு விசாரணை நடத்தினாலும் கூட, கம்போடிய நாட்டுச் சூழலும், கம்போடிய இராணுவ அதிகாரிகளுடன் உள்ள தொடர்பும் புலிகளுக்கு சாதகமாகவே இருக்கும்.

ஆனால் தற்போதுள்ள பிரச்சினை முல்லைத்தீவு கடலுக்குள் புலிகளின் கப்பல்கள் வந்து சேருவதுதான். இந்திய கடற்படையின் தீவிர ரோந்தும் புலிகளுக்கு ஒரு தடையாக உள்ளது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனை

புறோய்லர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. 1 kg, 150/- மெமோறியல் வீதி, மானிப்பாய். (மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை முன்பாக) (43553)

இறைச்சிக்கோழி (Broiler விற்பனைக்கு உண்டு சுத்தம் செய்து கொடுக்கப்படும். முகவரி: அல்போன்சஸ், இல. 68 பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (43561)

வீட்டுத் தளபாடங்கள் Yamaha, Mate 90 Model மோட்டார் சைக்கிள் (மண் எண்ணெய்க்கு மாற்றப்படாதது) தேக்கு அலுமாரி, தேக்கு சாப்பாட்டு மேசை, கதிரைகள், சோக்கேஸ், மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்கள் விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம்; பி. ப. 1. 00 மணிக்கும் 5. 00 மணிக்கும் இடையில் (பழைய நேரம்) முகவரி: மா. கந்தப்பு, 75 (109), அரசடி வீதி, யாழ்ப்பாணம். (8958)

### இறைச்சிக் கோழி

1½ kg விற்கு மேற்பட்ட நிறையுடைய இறைச்சிக் கோழி (புறோயிலர்) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. R. S. K கோழிப்பண்ணை, முருகாபதி, உடுவில், சுன்னாகம். (உடுவில் மான்ஸ் பாடசாலை வீதி). (43477)

### உடன் விற்பனைக்கு

இறைச்சிக் கோழிகள் (Broiler) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: Red Rose Farm, ந. குணராஜ், கே. கே. எஸ் வீதி, வல்வெட்டித்துறை. (சி-3473)

### கணிதம் (O/L)

Distinction, Credit பெறுபேறடைய தினமும் இரண்டு மணித்தியாலங்கள் (Paper Class) உட்பட) கற்பிக்கப்படும். ஆசிரியர் 85, சிவன் கோவிலடி (சிவன் கோவில் மேற்கு வீதி), திருநெல்வேலி. (43562)

### இசை வகுப்புகள்

ஓகன், புல்லாங்குழல், கிற்றார் வகுப்புகள் சனி, ஞாயிறு ஆகிய நாள்களில் நடைபெறும். முகவரி: புவனகிரி, ஸ்ரேசன் றோட், கோண்டாவில் (நிரு கல்வி நிறுவனத்திலிருந்து 500 யார் கிழக்கே). (43512)

## முதலீட்டு பணிப்பாளர் சபை


கொழும்பு, நவ. 9

வெளிநாட்டு முதலீட்டுப் பணிப்பாளர் சபையின பணிப்பாளர்களிடமிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி ராஜினாமாக் கடிதங்களைக் கோரியிருந்தார். அத்துடன் பணிப்பாளர் சபையும் கலைக்கப்பட்டது.

புதிய பணிப்பாளர் சபை நேற்று முன்தினம் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டது. இச்சபையில் ஒரு பணிப்பாளர் (பற்றிக் அமரசிங்கா) தவிர முன்னைய பணிப்பாளர் அனைவரும் புதிய பணிப்பாளர் சபையில் இடம்பெற்றுள்ளனர்.

மாநாடு ஒன்றில் தனியார் துறை தொடர்பாக பற்றிக் அமரசிங்கா குரல் எழுப்பியதே அவர் புதிய பணிப்பாளர் சபையில் இடம்பெறாததற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## மூவாண்டு நினைவஞ்சலி



மலர்வு: 26 – 07 – 1946

மறைவு: 12 – 11 – 1993

அமரர்

### கணபதிப்பிள்ளை கமலானந்தன்

(ஓய்வுபெற்ற, புகையிரதப் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்)

திதி: 09 – 11 – 1996

அன்பான ஆற்றலுள்ள பண்பான ஈகை
மிக்க ஊக்கமுள்ள எங்கள் அப்பாவே!
ஆண்டு மூன்று போனாலும் என்றுமே
எங்கள் உள்ளத்தில் நீங்காது நிறைந்திருப்பீர்.
எம்மோடு பாசமுடன் பார்புகழ வாழ்ந்தவரே!
என்றுமே கண்ணியமாய் உம் வழியில் நாம் வாழ்வோம்.

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

58, நெடுங்குளம் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (43425)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### திருமதி வைத்திலிங்கம் பூமணி

(சிவன் கோயிலடி, சாவகச்சேரி)

மலர்வு: 11 – 06 – 1932

மறைவு: 11 – 10 – 1996

அன்னாய் உனக்கென்ன அவசரமோ?
அவனியைப் பிரிந்துசெஅஃதென்ன நேர்த்தியோ?
மாதமொன்று மறைந்ததம்மா மண்ணுலகை நீ மறந்து
மாதமென்ன வருடமென்ன மண்ணுலகே- மறைந்தாலும்
பூமணியாம் உன்நாமம் புவிமிசை மறந்திடுமோ

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட எமது தாயாரின் மறைவின் போது நேரில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டு அனுதாபத்தை தெரிவித்த வர்த்தக சங்கத்தவர்களுக்கும், மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் நாளை (10/11/96) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

V. சிவராசா (மகன்)
சிவா ரேடிங் சேர்,
சாவகச்சேரி. (43535)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிவாரணப் பணம் பெற

## வங்கிக் கணக்கை திறக்க அறிவுறுத்து

வலிகாமம் தெற்கு நவ. 9

யாழ்ப்பாண மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு நிவாரணப் பணம் வழங்குவதற்கு வசதியாக, ஒவ்வொரு குடும்பத்தினரும் வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிக்குமாறு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு தலா ஏழாயிரம் ரூபா நிவாரணம் வழங்குவதற்கு என பிரதேச செயலகங்கள் மூலம் பதிவு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்வு நிவாரணப் பணம் பெறத்தகுதியுடைய குடும்பங்களை உடனடியாக ஏதாவது ஒரு வங்கியில் சேமிப்பு கணக்கொன்றை ஆரம்பித்து, சேமிப்பு கணக்கு இலக்கத்தை தத்தம் கிராம சேவையாளர்களிடம் அறிவிக்குமாறு உடுவில் பிரதேச செயலக செயலர் ஆ. மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

சேமிப்பு கணக்கை கிராமிய வங்கி உட்பட ஏதாவது ஒரு வங்கியில் ஆரம்பிக்கலாம் எனவும் —

ஏற்கனவே வங்கியில் சேமிப்பு கணக்கு உள்ளவர்கள் புதிதாக கணக்கைத் திறக்க வேண்டியதில்லை எனவும் திரு. மகாலிங்கம் மேலும் தெரிவித்தார். (இ-152)

## முக்கிய பொருள்களுக்கு முன்னர் மதுபான வகை!

### கப்பலில் இருந்து இறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 9

உணவுப்பொருள்கள், மருந்துப் பொருள்கள், புடைவை வகைகள், கட்டடப் பொருள்களை இறக்குவதற்கு முன்னர் ஒழுங்கு மாறி மதுபான வகைகள் கப்பலில் இருந்து இறக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

பாவனைப் பொருள்கள் இப்போது பருத்தித்துறை துறைமுகத்திலேயே இறக்கப்படுகின்றன எனினும் அவற்றை ஏற்றிவரும் கப்பல்கள் காங்கேசன்துறை துறைமுகத்திலேயே தரித்து நிற்பதுண்டு.

'மாஹோ' 'ரீயூனியன்' 'வாதுவ' ஆகிய கப்பல்கள் இம்முறை பல வகையான பாவனைப் பொருள்களுடன் கொழும்பில் இருந்து வந்தன.

'மாஹோ' கப்பலில் கொண்டு வரப்பட்ட பொருள்கள் பருத்தித்துறை துறைமுகத்தில் இறக்கப்பட்ட பின்னர், கடலட்டை, புகையிலை போன்ற பொருள்கள் அதில் ஏற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இக்கப்பல் காங்கேசன் திரும்பிய பின்னரே "ரீயூனியன்" "வாதுவ" ஆகிய கப்பல்கள் பருத்தித்துறைக்குச் சென்று பொருள்களை இறக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஆனால் "ரீயூனியன்" "வாதுவ" கப்பல்கள் பருத்தித்துறை சென்று உணவு, மருந்து, புடைவை உட்படப் பொருள்களை இறக்குவதற்கு முன்னர் —

"வாதுவ"வில் கொண்டு வரப்பட்ட மதுபான வகைகள் காங்கேசன்துறை துறைமுகத்தில் வைத்தே இறக்கப்பட்டதாக — அறிய வந்துள்ளது. (அ-3)

## நிரு ரியுசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**A/L 97, 98**

பௌதிகவியல்: மின்னியல்

திரு. சோதிலிங்கம்
B. Sc. (Hons) Dip in - Ed.

ஆரம்பம்: 11 – 11 – 96 திங்கள் (3 மணி)

(43563)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 12 – 07 – 1912



மறைவு: 22 – 10 – 1995

### அமரர் வேலுப்பிள்ளை தம்பு

(தம்பு மாமா)

(இளைப்பாறிய ஓவசியர்)

திதி; 09 - 11 - 1996

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
எம்மை அன்போடும், பண்போடும், பாசத்தோடும்
வழி நடத்திய அன்புத் தெய்வமே ஐயா! ஆண்டு
ஒன்று போனாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் உயிருள்ளவரை மாறாது.

உங்கள் பிரிவால் துயருறும்:

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல: 8, கல்லூரி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (43542)

# யாழ். பல்கலைக்கழக தூதுக்குழு ஜானக பெரேராவைச் சந்தித்தது

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் ஆசிரியர்கள், மாணவர்கள், பீடத்தலைவர்கள், ஊழியர்கள் அங்கம் வகித்த 15 பேர் கொண்ட குழு யாழ். மாவட்ட இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜானகபெரேராவை கடந்த புதன்கிழமை சந்தித்தது

இச் சந்திப்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் வருமாறு:-

★ யாழ். பல்கலைக்கழக மாணவர் எவராவது படையினரால் கைது செய்யப்படும் பட்சத்தில் அது தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு தெரியப்படுத்த வேண்டும். எங்கே அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்ற விவரமும் அறியப்படுத்தப்பட வேண்டும்.

★ யாழ். மருத்துவ பீடத்துக்கும், பல்கலைக்கழக பிரதான அலுவலகத்துக்கும் இடையில் உள்ள பாதுகாப்பு அரணை அப்புறப்படுத்தி இரு துறைகளும் ஒரே கட்டுப்பாட்டில் இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

★ பல்கலைக்கழகத்துக்குத் தேவையான இரசாயனப் பொருள்கள் மற்றும் உபகரணங்களை கொழும்பில் இருந்து எடுத்துவர உதவ வேண்டும். (இ-3)

## உதயன்

## ஜே. ஆர். வழியில் சந்திரிகா!

யுத்தத்துக்கு பெருமளவு நிதி செலவிடப்படுவதால் வரவு — செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை எக்கச்சக்கமாக அதிகரித்துள்ளது. இதனை ஈடு செய்வதற்காக வரிகளை அதிகரிப்பதற்கும் தடை செய்யப்பட்டிருந்த சூதாட்ட (கசினோ) விளையாட்டுக்கு மீண்டும் அனுமதி அளிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

பிரதி நிதியமைச்சர் ஜி. எல். பீரிஸ் கடந்த புதனன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த உரையில் கசினோக்களுக்கு அனுமதி அளிப்பது பற்றிய முடிவு அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

புலிகளுக்கு எதிரான போரில் வெல்வதற்கு எந்த வகையில் என்றாலும் நிதியைத் திரட்ட அரசு தயாராக இருக்கின்றது என்பதைத்தான் இந்த அறிவிப்பு எடுத்துக்காட்டுகின்றது,

பெரும் சமூக அநீதி இழைக்கப்பட்டாலும் கூட — போருக்கு நிதி கிடைக்குமானால் — அந்த அநீதியைத் தடுக்க மாட்டோம் என்று அரசு கங்கணம் கட்டியிருப்பதாகத் தெரிகின்றது.

இலங்கையில் மூடப்பட்ட இஸ்ரேல் தூதரகத்தை — இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவை — மீண்டும் திறப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தமது ஆட்சிக் காலத்தில் தீர்மானித்த போது அதற்கு இலங்கை மக்கள் மத்தியிலிருந்து — குறிப்பாக முஸ்லிம்களிடமிருந்தும் அப்போதைய பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிடமிருந்தும் — கடும் எதிர்ப்புக் கிளம்பியது.

இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவை கொழும்பில் திறப்பதன் மூலம், புலிகளுக்கு எதிரான போருக்கு இஸ்ரேலிடமிருந்து அதிக உதவியைப் பெறலாம் என்று நம்பிய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ''போரில் வெல்வதற்காக நான் பிசாசுடன் கூட கூட்டுச் சேரத் தயார்!'' — என்று அறிவித்திருந்தார்.

அன்று அவர் பிசாசுடன் கூட்டுச் சேர்ந்தாரோ இல்லையோ —

இப்போதைய நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான திருமதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் --

போருக்கு நிதி திரட்டுவதற்காக இலங்கை இளைஞர் சமூகத்துக்கு சூதாட்டத்துடன் 'திருமணம்' செய்து வைக்கப்படவிருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சூதாட்ட விடுதிகள் காலூன்றத் தொடங்கிய காலத்தில் — 1990 இல் — பல வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியில் சூதாட்ட விடுதிகளைத் தடை செய்யும் முடிவு எடுக்கப்பட்டிருந்தது.

இலங்கை போன்ற தென் கிழக்காசிய நாட்டுக்கு அதன் பண்பாடு, கலாசாரம், அவற்றின் விழுமியங்கள் மிக முக்கியமானவை; சமூக ஐக்கியத்துக்கும் அவை அவசியமானவை.

சில கோடி ரூபா வருட வருமானத்துக்காக பண்பாட்டு, கலாசார சீரழிவுகளுக்கு இடம் கொடுக்கும் நடவடிக்கைகளை அரசு நாடக் கூடாது.

எனவே போர் எனும் போட்டியில் வெல்வதற்கு தப்புத் தாளங்களை நாடுவதை அரசு தவிர்க்க வேண்டும்.

## யுத்தம் தொடரும் வரை அபிவிருத்தி ஏற்படாது

### நாடாளுமன்றில் ஹமீத்

வடக்கில் யுத்தம் தொடரும் வரை இலங்கையினால் எவ்வித பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ள முடியாது.

ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் எம். பியுமான ஏ. சி. எஸ். ஹமீத் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

உலகில் ஏனைய மக்கள் அனுபவிக்கும் பல்வேறு வசதிகளையும் தேவைகளையும் இந்நாட்டு மக்கள் உணர்ந்துள்ளார்கள்.

இந்த அரசாங்கத்தின் மூன்றாவது வரவு- செலவுத் திட்டம் பொது மக்களின் தேவைகளை நிறைவேற்றமாட்டாது என்றும் அவர் கூறினார்.

இறக்குமதிகள், ஏற்றுமதிகள் ஆகியன தொடர்பான யோசனைகளை வரவேற்ற ஹமீத் இலங்கையில் ஒரு யதார்த்தமான இறக்குமதி - ஏற்றுமதிக் கொள்கை மூலமாகவே பொருளாதாரத்தை விருத்தி செய்ய முடியும் என்றார்.

இதே வேளை மக்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார். (இ-ரி)

## ஜனவரி மாதம் முதல் புதிய தபாற் கட்டணம்

தபால் திணைக்களம் வரவு - செலவுத்திட்ட யோசனைகளுக்கமைய புதிய தபாற் கட்டணங்களையும், ஏனைய கட்டணங்களையும் ஜனவரி மாதம் முதல் அமுல் செய்ய உள்ளது.

இதன்படி சாதாரண தபால்களுக்கான முத்திரைக் கட்டணம் இரண்டு ரூபாவிலிருந்து இரண்டு ரூபா ஐம்பது சதமாகவும் — பத்து ரூபா ஐம்பது சதமாகவிருந்த பதிவுத்தபால் முத்திரைக் கட்டணம் பதினொரு ரூபாவாகவும் — அதிகரிக்கப்படும்.

தபால் அடையாள அட்டைகளுக்கென 35 ரூபா செலுத்த வேண்டும். இதுவரை இக் கட்டணம் 25 ரூபாவாக இருந்து வந்தது.

இத்துடன் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் சகல தபாலகங்களும் உபதாபாலகங்களும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் அரசாங்க விடுமுறை தினங்களிலும் மூடப்பட்டிருக்கும். (இ-ரி)

## யாழ். ஆஸ்பத்திரியில் நோயாளி மர்ம மரணம்

யாழ்ப்பாணம், நவ. 9

வார்ட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவர் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

யாழ். போதனா வைத்திய சாலையில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றது

இச்சம்பவத்தில் இளவாலையைச் சேர்ந்த பிரான்ஸிஸ் சேவியர் (வயது 50) என்பவரே உயிரிழந்தவராவார்.

காய்ச்சல் காரணமாக கடந்த புதன்கிழமை யாழ். ஆஸ்பத்திரி வைத்தியப் பிரிவு வார்ட்டில் இந்நோயாளி அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

நேற்று அதிகாலை பார்த்த போது இவர் வார்ட்டில் காணாமல் போயிருந்தது தெரியவந்தது.

உடன் அப்போதிருந்த ஆஸ்பத்திரி வைத்தியப் பொறுப்பதிகாரியிடம் வார்ட் தாதியரால் இது குறித்து முறைப்பாடு செய்யப்பட்டது பின்பு ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவிலும் முறைப்பாடு செய்யப்பட்டது.

காணாமல்போன நோயாளி அவர் சிகிச்சை பெற்று வந்த வார்ட்டுக்கு அருகில் இருந்த இன்னொரு வார்ட் ஒன்றினுள் மலசல கூட வாசலில் இறந்து கிடக்கக்காணப்பட்டார்.

கழுத்தில் மின் வயரினால் சுற்றிக் கட்டி சுமார் ஒன்றரை அடி நீள மின் வயர் துண்டு (தும்புத்தடியில் இருந்து முறித்து எடுக்கப்பட்டிருந்தது) ஒன்றினால் வயர் சுற்றிக் கழுத்து நெரிபடும் வரை முறுக்கப்பட்டிருந்தது.

மலசலகூட வாசலில் தலை வைத்தபடி முகம் குப்புறக் கிடந்த இந்தச் சடலத்தின் வாயிலிருந்து இரத்தம் வெளியேறிக் கிடக்கக் காணப்பட்டது.

சடலம் மரண விசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது.

சடலம் காணப்பட்ட வார்ட் முன்பு சர்மரோக வார்ட்டாக இயங்கி வந்தது. தற்போது அது திருத்த வேலைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதால் இயங்காத நிலையில் உள்ளது. (இ-15)

### நாளை

ஐப்பசி 25
ஞாயிற்றுக்கிழமை
திதி: சதுர்த்தசி
முற்பகல் 10.39 வரை.
நட்சத்திரம்: சுவாதி
பின்இரவு 1.09 வரை.
அமாவாசை விரதம் -
கேதாரகௌரி விரதம்
தீபாவளித் திருநாள்
ராகுகாலம்: 4.36-6.06
சுபநேரம்: 9.06 -10.36
(பகலுக்கும் இரவுக்கும்
பழைய நேரப்படி)

## கப்பலில் புகையிலை

வடமராட்சி, நவ. 9

தென்பகுதிக்கு எடுத்துச் செல்வதற்காக மாஹோ கப்பலில் புகையிலைச் சிப்பங்கள் ஏற்றப்பட்டுவருகின்றன.

நேற்றும் நேற்றுமுன்தினமும் புகையிலைச் சிப்பங்களை கப்பலில் ஏற்றும் பணி நடைபெற்றது.

புகையிலைச் சிப்பங்களுடன் இக்கப்பல் இன்று சனிக்கிழமை கொழும்பு நோக்கிப் புறப்பட்டுச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்து இளைஞர் சங்கம்

வலிகாமம்-தெற்கு, நவ. 9

உடுவில் கிராமத்தில் இந்து இளைஞர் சங்கம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. [இ-152]

## அமைதி ஏற்படாதவரை அபிவிருத்தி கேள்விக்குறி

### பிரதி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, நவ. 9

''இன்று இடம்பெறும் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்தாத வரை அபிவிருத்தி என்பது கேள்விக்குறியாகவே இருக்கும். நாங்கள் எந்தவொரு போராட்டக் குழுவுக்கும் எதிரானவர்கள் அல்லர். இந்த யுத்தத்தில் தினமும் இறப்பது எமது நாட்டு மக்களே.''

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதி தொலைத்தொடர்பு அமைச்சருமான எம். எல். ஏ. ஹிஸ்புல்லா தெரிவித்தார். (இ-3)

## தொழில் நுட்பக்கல்வியை அபிவிருத்திசெய்யவேண்டும்

### கரம்பொன் கலைவிழாவில் உரை

ஊர்காவற்றுறை, நவ. 9

''தற்போதைய போர்ச் காலச் சூழலில் தமிழ் மக்களின் கல்வி சீரழிந்த நிலையில் உள்ளது. அடுத்த சமுதாயம் முன்னேற தொழில் நுட்பக் கல்வியை அபிவிருத்தி செய்ய வேண்டும்''

இவ்வாறு யாழ். மாவட்ட எம்.பியான. இ. இராமேஸ்வரனின் செயலாளர் வ. சிவா தெரிவித்தார்.

கரம்பொன் ஸ்ரீ முருகன் பாலர் பாடசாலையின் கலை விழாவில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

கரம்பொன் சண்முகநாத மகாவித்தியாலயத்தில் சில தினங்களுக்கு முன்னர் இக் கலை விழா நடைபெற்றது.

சிறுவர் பாடசாலைகள் கல்வியின் அடித்தளமாக விளங்குவதால் சிறுவர் மட்டத்திலேயே தொழில் நுட்ப அறிவை புகட்டக் கூடிய கல்வியை வழங்க வேண்டும் என்றும் அவர் தமது உரையில் கூறினார்.

ஈ.பி.டி.பி அமைப்பின் காரைநகர் பொறுப்பாளர் ந. லோகன் பேசுகையில், சிறுவர் பாடசாலை மாணவர்களின் ஊக்குவிப்புக்கு பெற்றோர்களின் பங்களிப்பு அவசியம். இப்படியான கலை விழாக்கள் மாணவர்களிடையே தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்றார்.

ஈ.பி.டி.பி. கரம்பொன் பொறுப்பாளர் ஏ. நிஷாந்தன். கரம்பொன் சண்முகநாத மகாவித்தியாலய அதிபர் சிறீரங்கநாதன், கரம்பொன் மேற்கு கிராம சேவையாளர் எஸ். கணபதிப்பிள்ளை ஆகியோரும் பங்கேற்றனர். (இ-3)

## இலங்கைக்கு பொருள்கள் கடத்துவதற்கு முயற்சி

### தமிழ் நாட்டில் அறுவர் கைது

சென்னை, நவ. 9

இலங்கைக்கு சட்டவிரோதமாக கடத்திச் செல்லப்படவிருந்த பொருள்களை நெல்லைப்பட்டணத்துக்கு அருகேயுள்ள வட்டானம் என்னும் இடத்தில் சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இது தொடர்பாக 2 விடுதலைப் புலிகள் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் —

கைது செய்யப்பட்டவர்கள் மதுரை கூடுதல் தலைமை மாஜிஸ்திரேட் முன் நிறுத்தப்பட்டு 15 நாள் நீதிமன்ற காவலில் வைக்க உத்தர விடப்பட்டது என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். நூலகம் விரைவில் புனரமைப்பு

கொழும்பு, நவ. 9

முன்னர் சில சக்திகளினால் நாசம் செய்யப்பட்ட யாழ்ப்பாண நூலகம் விரைவில் புனரமைக்கப்படவிருக்கிறது.

நவீன வசதிகள் கொண்ட மூன்று மாடிக் கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்படும் என்றும்—

வாசிப்புக் கூடம், கருத்தரங்கு நடத்தும் இரு மண்டபங்கள், கேட்போர் கூடம், சிறுவர் வாசிகசாலைப் பிரிவு, சுவடி, காப்பகம் ஆகியன அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## சேவைக்கால பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம் கல்வி வலயம் இரண்டில் ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்புக்களில் பொருளியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பொருளியல் பாடசேவைக் கால பயிற்சி வகுப்பு எதிர்வரும் 11 ஆம் 12 ஆம் திகதிகளில் கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் நடைபெற உள்ளது.

வர்த்தக பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் நா. வரதராசா இதனை ஒழுங்கு செய்துள்ளார். (இ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீலங்கா அணியிடம் பாகிஸ்தான் தோல்வி

சாஜா, நவ. 9

ஸ்ரீலங்கா, நியூசிலாந்து, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகள் பங்குபற்றும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று ஸ்ரீலங்கா அணி பாகிஸ்தான் அணியை 75 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீலங்கா அணி 50 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சனத் ஜெயசூரியா 33, அசங்க குருசிங்க 31, றொஷான் மகாநாம 37, ஓட்டங்களை முறையே பெற்றனர்.

பதிலளித்து ஆடிய பாகிஸ்தான் அணி 36 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 131 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. சனத் ஜெயசூரிய 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சஜீவ சில்பா 47 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், முத்தையா முரளிதரன் 33 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். (இ-10)

# நாவற்குழிச் சம்பவம் குறித்து கடும் நடவடிக்கை

## அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, நவ. 9

யாழ்ப்பாணம் நாவற்குழியில் கிருஷாந்தி குமாரசுவாமி, அவரது தாயார், சகோதரர், அயலவர் ஆகியோர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான பூர்வாங்க விசாரணை இம் மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இது குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கைதடியில் இடம் பெற்ற கற்பழிப்பு, கொலை, மரணங்கள் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட அனைத்து சாட்சியங்களும் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதுவரை இடம் பெற்ற புலன் விசாரணைகளில் இராணுவத்தில் நான்கு பேரும், இரு றிசேர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள்களும் நேரடியாக இந்தக் கற்பழிப்பு கொலை நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பது தெரியவந்திருக்கிறது — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# யால சரணாலயத்தில் கிளைமோர் நிலக்கண்ணி

## மோட்டர் லோஞ்சர்களும் மீட்பு

யால தேசிய வனவிலங்கு சரணாலயத்தில் உள்ள தெமோதர குகைக்குள் ஒன்றரைக் கிலோ எடையுடைய கிளைமோர் நிலக்கண்ணி மற்றும் இரண்டு மோட்டர் லோஞ்சர்கள் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டன.

மகாவில பொலீஸார் இவற்றைக் கைப்பற்றினர்.

இவ்வாயுதங்கள் கைப்பற்றப்பட்ட இடத்தில் சிவப்பு நிற பொலித்தீன் துண்டு வைக்கப்பட்டிருந்தது. வெற்று லக்ஸ்பிறே பைக்கெட் உறைகள், கிறீம் கிராக்கர் பெட்டிகள் போன்றவையும் குகை அருகில் காணப்பட்டன.

யால வனவிலங்கு சரணாலயப் பகுதியில் உள்ள உல்லாசப் பயணிகளின் தங்கும் விடுதி ஒன்று தீவிரவாதிகளால் அண்மையில் எரிக்கப்பட்டதும்—

அங்கிருந்த வாகனங்கள் அவர்களால் அபகரித்துச்செல்லப்பட்டதும் தெரிந்தவையே. [உ-150]


## கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

புதிய அதிபர் பதவி ஏற்று
வரவேற்பு விழா காண இருக்கும்

**திரு. N. சிவகடாட்சம்**

(B. Sc. Dip - in - Education)

அவர்களை வாழ்த்துவதோடு சகல கடாட்சங்களும் பெற்று கல்விப் பாரம்பரியத்தை பேணிப்பாதுகாத்து வாழப்போகும், வளரப்போகும் மாணவ சமுதாயத்திற்கும், பாடசாலையின் வளர்ச்சிக்கும் உயர் அதிபர் பணியாற்றி —

' நீதி உயர்ந்த மதி கல்வி
அன்பு நிறைய உடையவர் மேலோர்''

என்ற பாரதியாரின் பாடலுக்கமைய வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி நிற்கின்றேன்.

Dr வை. தியாகராஜா
(பழைய மாணவன்)
"MEDI AIDS"
Nallur.

(43559)


மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

# காணாமற் போனோர் முறைப்பாடு தனித்தனியாக விசாரிக்க வேண்டும்

## ஜனாதிபதிக்கு நீலன் கடிதம்

''யாழ். மாவட்டத்தில் கானாமல் போனோர் பற்றிய முறைப்பாடுகளை தனித் தனியாக விசாரிக்க வேண்டும்.''

இப்படித் தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வம் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் கோரி உள்ளார்.

யாழ்ப்பாணத்தில் 135 பேர் காணாமல் போயுள்ளதாக மனித உரிமை இல்லம் தெரிவித்துள்ளது.

அவர்களில் ஒவ்வொருவரின் முறைப்பாட்டையும் தனித் தனியாக விசாரித்து பூரணமான அறிக்கை வெளியிட வேண்டும்;

சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் படவேண்டும்.

இப்படி அவர் தமது கடிதத்தில் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் மனித உரிமை நடவடிக்கைக் குழு நிறுவுமாறு விடுத்த கோரிக்கைக்கும்—

கைதடியில் கிருஷாந்தி குமாரசாமி மற்றும் மூவர் கொல்லப்பட்டமை தொடர்பாக உண்மை நிலை குறித்து அறிக்கை விடுமாறு விடுத்த கோரிக்கைக்கும்— இன்னமும் எதுவும் நடக்கவில்லை என்றும் அவர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமை இல்லம் தயாரித்து காணாமற் போன 135 பேரின் பெயர், விவரங்கள் அடங்கிய பட்டியல் கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இ-150-3)

# அகிலா மறைவுக்குப் பழிவாங்க பெண் தற்கொலைப்படை அமைப்பு

## கொழும்புப் பத்திரிகை தகவல்

கொழும்பு, நவ 9

கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவுத் தலைவியான அகிலாவின் மறைவுக்குப் பழிவாங்குவதற்காக 25 பெண் போராளிகளைக் கொண்ட தற்கொலைப் படை அணி ஒன்றை புலிகளின் தலைவர் பிரபாகரன் அமைத்துள்ளார்.

தேசிய புலனாய்வுப் பணியக அதிகாரிகளை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று இத் தகவலை வெளியிட்டிருக்கின்றது.

இந்தப் படையணியின் சில உறுப்பினர்கள் கொழும்பு நகருக்குள் ஊடுருவி விட்டனர்; அல்லது ஊடுருவ முயல்கின்றனர்.

சில பெண் தற்கொலைப் போராளிகள் தலை நகருக்குள் ஊடுருவியிருப்பதை அடுத்தே கொள்ளுப்பிட்டியில் சில வீதிகள் அண்மையில் மூடப்பட்டதாக பரவலாகப் பேசப்படுகின்றது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் சேர்ந்து குற்றம் சுமத்தப் பட்டுள்ள அகிலா, கடந்த வருடம் இடம் பெற்ற 'சூரியப்பிரகாசம்' இராணுவ நடவடிக்கையின் போது கொல்லப்பட்டார் என்பது தெரிந்ததே.

—இவ்வாறு அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது. (உ-150)

# இந்திய மீனவர் போராட்டம்

இராமேஸ்வரம், நவ 9

தமிழ்நாடு பாம்பனைச் சேர்ந்த 9 மீனவர்கள் கடந்த 5 ஆம் திகதி தொடக்கம் காணாமற்போய் விட்டனர்.

காணாமற் போன மீனவர்களைக் கண்டுபிடித்துத் தரக் கோரி சுமார் 300 மீனவர்கள் காலவரையறையற்ற வேலைநிறுத்தத்தில் இறங்கி உள்ளனர்.

அதேசமயம் இந்த மீனவர்கள் இலங்கையில் பத்திரமாக இருப்பதாக நேற்று இலங்கையில் இருந்து ஒரு தகவல் இராமேஸ்வரத்துக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. (இ-4)

# புலிகளை சம்பந்தப்படுத்த 3ஆம் தரப்பின் உதவி

## தங்கத்துரை யோசனை

கொழும்பு, நவ 9

''இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் இரு பிரதான அரசியல் கட்சிகளும் முன் நின்று செயல்பட வேண்டும். பிரச்சினைக்குத் தீர்வு காணும் நடவடிக்கையில் விடுதலைப் புலிகளையும் சம்பந்தப் படுத்த வேண்டும். இதற்கு தேவையானால் மூன்றாம் தரப்பின் உதவி பெறப் பட வேண்டும்.''

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் த. தங்கத்துரை மேற் கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று வரவு செலவுத் திட்ட விவாதத்தில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-3)

## வவுனியா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு விடுதலைப் புலிகள் சந்தேக நபர்களை வவுனியாப் பகுதியில் வைத்து படையினர் கைது செய்திருப்பது குறித்தும் —

அவர்களிடமிருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில் வவுனியா வீரபுரத்தில் 40 கிளோ எடையுள்ள இரண்டு கிளைமோர் கண்ணிகளை படையினர் மீட்டிருப்பது குறித்தும்—

அச்செய்தியாளர் குறிப்பிட்டிருக்கின்றார்.

வவுனியாவுக்கும் தாண்டிக்குளத்துக்கும் இடையில் ஒவ்வொன்றும் சுமார் முப்பது பெண் சிப்பாய்களை தினசரி ஏற்றிச் செல்லும் இரண்டு பஸ்களையும் கடந்த 29 ஆம் திகதி இந்தக் கிளைமோர் குண்டு மூலம் தகர்க்கத் திட்டமிடப்பட்டிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (உ-150)

## மின்சாரக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன

கும்புறுமுலை காட்டுப் பகுதியில் உள்ள 5 அதி சக்தி வாய்ந்த கம்பங்களையும் புலிகள் குண்டு வைத்துத் தகர்த்தனர்

[illegible] களை வெட்டி எடுத்துச் சென்றனர் என்றும் தெரிவிக்கப் பட்டது. (இ-3)

## பட்டதாரி-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் — பட்டதாரி பயிலுநர் சங்கத்தலைவர் தெரிவித்தார்.

இதே போன்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் பயிலுநர் ஆசிரியர்கள் ஏற்கனவே ஈடுபட்டிருந்ததும் —

அரசு அளித்த வாக்குறுதிகளை அடுத்து அவர்களின் உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டதும் — தெரிந்ததே. (இ-3)

## இனப்பிரச்சினைக்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லேயே காணப்படவேண்டும். சுமுகமான தீர்வு காண இலங்கை அரசுக்கு ஆஸ்திரேலியா அனைத்து உதவிகளையும் வழங்கும்.

அங்கு அனைத்துக் கட்சியினரும் இணைந்து பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மூன்றாம் தரப்பு மூலம் பேசித் தீர்க்க எடுக்கும் முயற்சியை நாம் வரவேற்கிறோம்

ஆனால் 3ஆம் தரப்பு மூலம் தீர்வு காணக்கூடிய சூழ்நிலை அங்கு இருப்பதாகத் தெரியவில்லை.

இப்படி அவர் கூறினார். [இ-150-3]

## ரணில்--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் நடத்தப்பட்ட இந்தச் சித்திரவதை முகாமில் வைத்து தென் பகுதி இளைஞர்கள் பலர் படுகொலை செய்யப் பட்டதாகவும் —

கூறப்படுவது தெரிந்ததே.

இந்த விவகாரம் குறித்து விசாரணை செய்வதற்கு விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்திருந்தார்.

அந்த ஆணைக்குழு விசாரணையின் போது பட்டலந்த முகாமில் இடம் பெற்ற சித்திரவதைகள், படுகொலைகள் போன்றவை குறித்து பல்வேறு தகவல்கள் வெளியாகின.

இந்த விசாரணையின் போது எதிர்க்கட்சித் தலைவர் ரணிலின் பெயரும் பிரஸ்தாபிக்கப்பட்டது. அவர் அடிக்கடி அந்த வதை முகாமுக்கு வந்து சென்றதாகவும் சில சாட்சிகள் குறிப்பிட்டனர்.

அது குறித்தே, ஆணைக்குழுவுக்கு விசாரணையில் உதவி வரும் பொலீஸ் அதிகாரிகள் நேற்று ரணிலிடம் விரிவான விசாரணைகளை நடத்தினர்.

இந்த விசாரணை நேரடியாக ஒலிப்பதிவு செய்யப்பட்டது எனினும் இறுதியில் ரணில் விக்கிரமசிங்கவின் வாக்கு மூலத்தை பொலீஸார் எழுத்தில் பதிந்து அதில் அவரது கையொப்பத்தையும் பெற்றனர் என்த் தெரியவந்தது. [உ-3-10]

[illegible] லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், [illegible] வீதி, 392/3 இலக்கத்திலுள்ள அவர்களது [illegible] 09-11-1996 இல் [illegible] வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org